

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி, தாராபுரம் மேற்கு ஒன்றியம், பொட்டிக்காம்பாளையம் மற்றும் பொன்னாபுரம் ஊராட்சி கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடிகுழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழக அரசின் தமிழ்ச்செம்மல் விருதினை பெற்ற தமிழறிஞரும், நகைச்சுவை நாவலருமான தமிழ்ச்செம்மல் புலவர் இரெ.சண்முகவடிவேல் அவர்களின் ”நினைவின் நிழல்கள் புத்தக அறிமுக விழா திருத்துறைப்பூண்டி தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்றது. இதில் சங்க நிர்வாகிகள் எடையூர்.மணிமாறன், ஆசைத்தம்பி, ஆரூர்.அறிவு,யோகராஜன்,செந்தில், புலவர் கோமல் தமிழமுதன், எழுத்தாளர்கள் கீழை அ.கதிர்வேல், கமலாகந்தசாமி,குவளை கணேசன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர் .

## எம்,எல்,ஏ,க்கள் கடத்தல்-குதிரை பேரம் உதவியோடு த.வெ,க, ஆட்சி!

# பழனி சார்பதிவாளர் விடுமுறையில் செல்ல அழுத்தம் கொடுத்த Sir யார் - C.M. Sir?

## பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

**நெல்லை, ஜூலை 20 -**

**எம்.எல்.ஏ.க்கள் கடத்தல் - குதிரை பேரம் உதவியோடு த.வெ.க. ஆட்சி அமைந்துள்ளது. பழனி சார் பதிவாளர் விடுமுறையில் செல்ல அழுத்தம் கொடுத்த Sir யார்? C.M. Sir? என்று சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது குறித்து மு.அப்பாவு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

த.வெ.க என்ற கட்சியை தொடங்கி இரண்டு ஆண்டுகளாக தளபதி மு.க ஸ்டாலின் தலைமையிலான #திராவிடமாடல் ஆட்சிக்கு எதிராக பொய் செய்திகளை Reels களாக்கி 2 லட்சம் Fake Idகளை உருவாக்கி Instagram, WhatsApp, YouTube, Facebook, Xதளம் வழியாக மக்களிடம் பரப்பி அதன் மூலம் இந்த #Fake ஆட்சி உருவானது... MLAக்கள் கடத்தல் ,குதிரை பேரம் ஆகியவற்றின் உதவியோடு இந்த Fake ஆட்சி அமைந்த நாள் முதல் போதை பொருட்கள் கடத்தல், விற்பனை, சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை, கூட்டு பாலியல் பலாத்காரம், கொலை, கொள்ளை, காவல் மரணங்கள், சிறை மரணங்கள், டாஸ்மாக் பாட்டிலுக்கு 20 ரூபாய் வசூல், விவசாயிகளிடம் நெல் கொள்முதலுக்கு மூட்டைக்கு 40 ரூபாய் வசூல், அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் லஞ்சம் என்று அலங்கோலங்கள் அரங்கேறி வருகின்றன.

அதன் உச்சமாக பழனி கோவிலுக்கு சொந்தமான 100 கோடி ரூபாய் சொத்து அபகரிப்பு விவகாரம் அம்பலமானதும் அதனை மூடி மறைக்க முயற்சித்து அது முடியாமல் தோற்றுப் போனது இந்த அரசு...பழனி கோயில் நில அபகரிப்புக்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகள் ஜஸ்டீன் மணிகண்டன், பாலசுந்தர், மாரிமுத்து, நில விற்பனை செய்த முருகதாஸ், நிலத்தை வாங்கிய வெள்ளத்துரை, மற்றும் சேதுபதியை கைது செய்வத்றகு பதிலாக பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஊடகவியலாளர்கள் மாரிதாஸ், இந்திராணி, வினோத், மற்றும் விஜயன் போன்றோரை நள்ளிரவில் கைது செய்து திசை திருப்பும் செயலில் இறங்கி உள்ளது இந்த #Fake ஆட்சி... நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர், பத்திர பதிவுத்துறையின் மேல் அதிகாரிகளின் அழுத்தத்தால், பழனி சார் பதிவாளர் விடுமுறையில் சென்றதாக நீதிமன்றத்தில் வாதிட்டுள்ளார்,

அப்படியானால் அந்த அழுத்தம் கொடுத்த Sir யார், #CMsir ? திரைக்கவர்ச்சி மூலம் ஆட்சிக்கு வந்த இந்த #Fake ஆட்சியின் வேஷம் கலையத் தொடங்கி விட்டது .. மாற்றத்தை எதிர்பார்த்து ஏமாந்து போன இளைஞர்கள் கொந்தளிக்க தொடங்கி இருப்பதே அதற்கு சாட்சி....

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## கழக அரசின் தமிழ்ச்செம்மல் விருது பெற்ற புலவர் இரெ.சண்முகவடிவேல்

# எழுதிய “நினைவின் நிழல்கள்” புத்தக அறிமுகக் கூட்டம்!

## தமிழ்ச் சங்க செயலாளர்கள் ஆசைத்தம்பி – ஆரூர்.அறிவு பங்கேற்பு!

திருவாரூர், ஜுலை 20 -

கழக அரசின் தமிழ்ச் செம்மல் விருதினை பெற்ற தமிழறிஞரும், நகைச்சுவை நாவலருமான தமிழ்ச்செம்மல் புலவர் இரெ.சண்முக வடிவேல் அவர்களின் “நினைவின் நிழல்கள்” புத்தக அறிமுக விழா திருத்துறைப்பூண்டி தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்றது.

விழாவிற்கு திருத்துறைப் பூண்டி தமிழ்ச் சங்கத்தின் தலைவர் புலவர் எடையூர் மணிமாறன் தலைமையேற்றார். பத்திரிக்கையாளர் ப.ஜாகிர் உசேன் அனைவரையும் வரவேற்றார். பிரபல எழுத்தாளர்கள் தமிழ்ச் செம்மல் கமலா கந்தசாமி, நகைச்சுவை எழுத்தாளர் கீழை அ.கதிர்வேல், திருத்துறைப்பூண்டி தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் நல் நூலகர் மா.ஆசைத்தம்பி, குவளை கணேசன் , திருவாரூர் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் ஆரூர்.அறிவு ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

தமிழ்ச்செம்மல் புலவர் இரெ.சண்முக வடிவேல் அவர்களின் “நினைவின் நிழல்கள்” புத்தகத்தை திருவாரூர் தமிழ் இயக்க நிறுவுனர் புலவர் கோமல் தமிழமுதன் அறிமுகம் செய்து சிறப்புரை யாற்றினார்.

இறுதியில் நூலாசிரியர் நகைச்சுவை நாவலர், தமிழ்ச்செம்மல் புலவர் இரெ.சண்முகவடிவேல் அவர்கள் ஏற்புரையாற்றினார். திருத்துறைப்பூண்டி தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகி ஆசிரியர் யோகராஜன் நன்றி கூறினார்.

விழாவில் தமிழ் சங்க நிர்வாகிகள் , அரசியல் ஆன்மீகம், வர்த்தகம் , பதிரிக்கைத்துறை பிரமுகர்களும், தமிழ் ஆர்வலர்களும், பாரதமாதா நிறுவன சமூகக்பணியாளர்களும் பொதுமக்களும் பங்கேற்றனர்.



கோவை மாநகர் மாவட்டம், சங்கனூர் பகுதி வார்டு எண் 18ல் நடைபெற்ற கழக செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் சிறப்புரையாற்றினார். இதில் பகுதி கழக பொறுப்பாளர் குட்டி ஜெயசந்திரன், மாநில சட்டத்துறை இணை செயலாளர் பி.ஆர்.அருள்மொழி, மாவட்ட துணை செயலாளர் கல்பனா செந்தில், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆனந்த்குமார், வட்ட பொறுப்பாளர்கள் பூபாலன், கணேசன், பாலசுப்ரமணி, சுப்புராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பொத்தாம் பொதுவாக குற்றம்சாட்டக் கூடாது!

# பழனி நில முறைகேடு: பத்திரப் பதிவு எதார்த்தமா நடந்தது என்று சொல்வதா?

## அமைச்சர் நிர்மல் குமாருக்கு – முன்னாள் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கேள்வி!

*மதுரை, ஜுலை 20 -*

*பழனி கோவில் நிலம் முறைகேடாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நினைத்தவுடன் எந்த சொத்தையும் பதிய முடியாது எனவும், இது எதார்த்தமாக நடந்து விட்டது என அமைச்சர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி பேட்டியில் கூறியுள்ளார்.*

*மதுரை ஐயர் பங்களா பகுதியில் திமுக கட்சி அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் மூர்த்தி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், பழனி முருகன் பாலா தண்டபாணி அறநிலையத் துறைக்கு சொந்தமான இடத்தை பத்திர பதிவு மூலமாக நில மோசடி நடந்துள்ளது. எதற்காக இப்படி நடந்தது? யாரெல்லாம் அதற்கு உடனடியாக இருந்தார்கள்? என்பதை பற்றி எல்லாம் இரண்டும் நாட்களாக பொதுமக்கள் மத்தியில் விவாதங்களாக இருக்கிறது. பல்வேறு அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. அதற்கு காரணமாக இருந்தவர்கள் மீது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

**கோயில்கள் இடத்தை பதிவு செய்ய முடியாது!**

*நானும், முன்னாள் பதிவுத்துறை அமைச்சர் என்ற முறையில் கோயில்கள் இடத்தை பதிவே செய்ய முடியாது. எந்தெந்த பத்திர அலுவலகம் இருக்கிறதோ சம்பந்தப்பட்ட இடம் கோயில் நிலமாக இருந்தாலும், அரசு நிலமாக இருந்தாலும், நீர் நிலை புறம்போக்கு சொத்தாக இருந்தாலும் பதிய முடியாது. இன்று ஒரு சொத்தை பதிய வேண்டும் என்றால் ஒரு டோக்கன் போட வேண்டும். டோக்கன் போடாமல் பதிய முடியாது. இது தெரியாமல் பதிந்து விட்டார்கள். எதார்த்தமாக நடந்துவிட்டது என்று சொல்கிறார்கள்.*

*இந்தப் பதிவு இப்போது நடந்தது. கடந்த காலங்களில் அந்த பிரச்சனை இல்லை. அறநிலையத் துறை இடத்தை யாரும் பதியவில்லை. சட்டத் துறை மற்றும் மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் கடந்த ஐந்தாண்டு காலம் தி.மு.க. ஆட்சியில் தான் என்ன நடந்தது என சொல்லி வருகிறார். ஆனால், இவர்கள் ஆட்சியில் என்ற நடந்தது என சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு கடந்த ஐந்தாண்டில் பதிவுத்துறையில் அமைச்சரே இதை பதியுங்கள், அதைப் பதியுங்கள் என்று சொன்னதை போல் பேசுகிறார். பத்திரப்பதிவுத் துறை தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் கடந்த 5 ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

**சட்டத்துறையில்தான் பிரச்சினை!**

*தமிழகத்தில் உள்ள 516 அலுவலகத்தில் நான் ஆட்களை நியமனம் செய்ததாகவும் அவர்கள் மூலமாக நான் பணம் வாங்குவதாக சொல்கிறார். என் பெயரை குறிப்பிட்டே சொல்கிறார். அதை அவர் நிரூபிக்க வேண்டும். பத்திரப்பதிவுத் துறையில் நினைப்பதையெல்லாம் பண்ண முடியாது. பழனி கோவில் நில மோசடி எல்லா பத்திர அலுவலகத்திலும் ரெக்கார்டு உள்ளது. தமிழ்நாட்டில் முதல் முதலாக சட்டத் துறையில் தான் பிரச்சனை. அரசு வழக்கறிஞர் போடுவதில் முறைகேடு நடந்துள்ளது. தவெகவைச் சேர்ந்த சகோதரி ஞானசுந்தரி வழக்கு போட்டு உள்ளார்.*

*தமிழகத்தில் மின் கட்டணம் உயர்ந்துள்ளது. ஆனால் அதனை கவனிக்காமல், 60 நாளும் மீடியாவை சந்திக்கிற வேலையைதான் அமைச்சர் செய்து இருக்கிறார். மதுரைக்கு என்ன செய்துள்ளார் அவர்.*

*முதல மைச்சர் நிழலாக தான் அந்த அமைச்சர் இருக்கிறார். இரண்டு துறை அமைச்சராக இருக்கிறார். ஆனால், எல்லா துறைக்கும் பதில் சொல்வார். குறிப்பாக அறநிலையத்துறை கோயிலுக்கு சொந்தமான நிலம் ஒரு செண்ட் இருந்தாலும், எத்தனை ஏக்கர் இருந்தாலும் பதிவு செய்யக்கூடாது என்று அலுவலக பதிவேற்றம் உள்ளது. அதையும் மீறி பதிவு செய்து உள்ளனர். ஆட்சி பொறுப்புக்கு வந்தவுடன் லஞ்சம் இருக்காது என்று சொன்னார்கள் . லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் 60 அலுவலகத்தில் ரைடு செய்துள் ளனர். 37 லட்ச ரூபாய் கையடல் செய்ததை கண்டு பிடித்தனர்.*

*அமைச்சர் நிர்மல்குமார் என் மீது பொத்தாம்பொதுவாக குற்றம்சாட்டுகிறார். ஆதாரமின்றி எதையும் சொல்லக் கூடாது. ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா ?*

*பழனியில் நில முறைகேடு தொடர்பாக தெரியாம பத்திரப்பதிவு நடந்துச்சு எதார்த்தமா நடந்தது சொன்னா ஏத்துக்க முடியாது. நிர்மல்குமார் பொறுப்பு வகிக்கும் சட்டத்துறையிலேயே பிரச்சினை உள்ளதாக அவரது கட்சிக்காரர் கூறியுள்ளார்.*

*இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி பேட்டியில் கூறியுள்ளார்.*

## சாதி பெயர் சொல்லி

# சக நிர்வாகியை இழிவுபடுத்திய த.வெ.க. நிர்வாகி!

## வைரலான ஆடியோவால் நாமக்கல்லில் பரபரப்பு!

*நாமக்கல், ஜுலை 20 -*

*நாமக்கல் மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.என். சதீஷ், தனது கட்சி நிர்வாகி குறித்து ஜாதி பெயரை கூறியும், தகாத வார்த்தைகளிலும் பேசியதாகக் கூறப்படும் செல்போன் ஆடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

*வெளியானதாகக் கூறப்படும் அந்த ஆடியோவில், நாமக்கல் மாநகர கிழக்கு நகர செயலாளர் விஜய் மணியை ஜாதி பெயர் கூறி இழிவுபடுத்தியும், கட்சியில் உள்ள தலித் சமூகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் குறித்தும் அவதூறாக கருத்து தெரிவித்தும், மிரட்டல் விடுக்கும் வகையிலும் பேசியிருப்பதாக கூறப்படுகிறது.*

*மேலும், மாவட்ட துணைச் செயலாளர் தில்லை மோகனுடன் நடைபெற்றதாகக் கூறப்படும் இந்த உரையாடல் தேர்தலுக்கு முன்பு நடந்ததாகவும், தற்போது வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பரவி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.*

*இந்த ஆடியோ வெளியானதைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்ட த.வெ.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் கடும் அதிருப்தியும், சர்ச்சையும் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஜாதி உணர்வுகளைத் தூண்டும் வகையிலான இந்த பேச்சு, கட்சிக்குள்ளேயே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*



கோவை மாவட்டம், கிணத்துக்கடவு பேரூராட்சி பகுதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியினை பேரூராட்சி அலுவலகத்தில் பேரூராட்சி தலைவர் ஆர்.கதிர்வேல் தொடங்கி வைத்தார். உடன் பேரூராட்சி 8வது வார்டு உறுப்பினர் பாலமுருகன், 6வது வார்டு கிளை கழக செயலாளர் ரவிக்குமார் உடனிருந்தனர்.